## *ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்) அவர்கள் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

***பைத்துல் ஃபுதூஹ் ,இலண்டன்.*** ***நாள்:*** 11.*01.2008*

*பொருள் : எங்களுடைய இறைவா, அவர்களுக்கு உனது அடையாளங்களை எடுத்தோதி, வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுத்து, அவர்களை தூய்மைப் படுத்தும் ஒரு தூதரை அவர்களிலிருந்தே அவர்களிடம் தோற்றுவிப்பாயாக. நிச்சயமாக நீயே வல்லோனும், ஞானமிக்கோனுமாவாய். (2:130)*

கடந்த குத்பாவில் வக்ஃபே ஜதீத் சந்தாவிற்கான புதிய ஆண்டின் அறிவிப்பை செய்ய வேண்டியதிருந்ததால் நான் தற்போது ஓதிய வசனத்தின் கருத்தை என்னால் தொடர்ந்து கூற முடியவில்லை. எனவே, இன்றைய குத்பாவில் நான் இதே வசனத்தின் கருத்தை விளக்கவுள்ளேன்.

ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் செய்த துஆ இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கின்றது. இந்த வசனத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இரண்டாவது சிறப்புத் தன்மையாக **யுஅல்லிமுஹுமுல் கிதாப வல் ஹிக்மத்த வயுஸக்கீஹிம்** - அந்த மகத்தான தூதர் அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுத்து அவர்களை தூய்மைப்படுத்த வேண்டும் என்று ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் துஆ செய்தார்கள். அந்த மகத்தான தூதர் மீது நீ இறக்குகின்ற வசனங்களில் அல்லது அடையாளங்களில் படிப்பினை பெறத்தக்க சம்பவங்கள் உள்ளன; போதனைகள் உள்ளன; இறை தண்டனை பற்றிய செய்திகள் இருக்கின்றன. இதனைப் படித்துக் காட்டுவதுடன் மட்டும் தூதர் தனது நோக்கத்தை நிறைவேற்ற முடியாது. மாறாக, இந்த வசனங்களில் இனி வரப்போகும் மக்களுக்கும் பல பாடங்கள் இருக்கின்றது. எனவே எதிர்காலத்தில் நீ அனுப்பப்போகின்ற அந்த மகத்தான தூதர் தொடர்பாக அவர் இஸ்ரவேல் சந்ததிகளிலிருந்தும் தோன்ற வேண்டும் என்று நான் துஆ செய்கின்றேன். ஆகவே, அந்த தூதர் தனது வாழ்நாளில் மட்டும் இந்த வசனங்களை எடுத்தோதுபவராகவும் அவரது காலத்திலுள்ள மக்களுக்கு மட்டுமே பயன்பெறத்தக்க வகையிலுள்ள போதனைகளை தரக்கூடியவராக அவர் இருக்கக் கூடாது. மாறாக, இந்த மகத்தான தூதர் கியாமத் வரையிலுளள் மக்களுக்காக அனுப்பப்படுபவராக இருப்பதால் அவர் மூலம் கிடைத்திருக்கும் இந்த வேதத்தின் போதனைகள் எழுதப்பட்ட நிலையில் கிடைக்க வேண்டும். ஒரு வேத நூலின் வடிவில் அது இருக்க வேண்டும். அதன் மூலமாக கியாமத் நாள் வரையில் இந்த போதனைகளுக்கேற்ப செயல்படுபவர்கள் பிறந்து கொண்டேயிருக்க வேண்டும் என்று ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் துஆ செய்தார்கள். இந்த துஆவிலிருந்தும் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் இந்த மகத்தான வேதம் பற்றி அறிந்திருந்தார்கள் என்றே தெரிகிறது.

ஒரு காலத்தில் இப்படிப்பட்ட தூதர் ஒருவர் தோன்றுவார். அவரது போதனைகள் கியாமத் நாள் வரை நீடிக்கும். எனவே, எந்த காலத்தில் எத்தகைய மக்களுக்காக அவர் அனுப்பப்பட்டாலும் அவர் கொண்டு வந்துள்ள இந்த எல்லா போதனைகளும் வசனங்களும் எழுத்து வடிவில் ஒன்று திரட்டப்பட வேண்டும் என்றும் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் துஆ செய்தார்கள். உண்மையில் இந்த துஆவை அல்லாஹ்தான் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு கற்றுத் தந்துள்ளான். வரவேண்டிய அந்த மகத்தான தூதர் மீது இறங்க இருக்கின்ற ஷரீஅத் முழுக்க முழுக்க எழுத்து வடிவில் இருக்க வேண்டும். எப்படி அது எழுதப்பட்டிருக்குமென்றால் கியாமத் நாள் வரை அதன் ஒரு புள்ளி கூட மாறுவதற்கான வாய்ப்பு இருக்காது என்பது போன்ற விஷயங்கள் இந்த துஆவில் அடங்கியிருக்கின்றது.

இன்று திருக்குர்ஆன்தான் முஸ்லிம்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது மரணத்திற்குப் பிறகு எழுத்து வடிவில் கிடைத்திருக்கின்ற வேதநூலாக இருக்கின்றது. பிறகு அல்லாஹ் இந்த வேதத்தை மனனம் செய்கின்ற பல ஹாஃபிஸ்களை தோன்றச் செய்தான். அவர்களது உள்ளத்திலும் மூளையிலும் திருக்குர்ஆனின் ஒவ்வொரு எழுத்தும் பதிந்து விட்டன. அவர்களது நினைவில் எப்போதும் அவை இருக்கும் வகையில் திருக்குர்ஆனை அவர்கள் மனனம் செய்திருந்தார்கள். இன்றும்கூட இவ்வாறு மனனம் செய்யக் கூடிய ஹாஃபிஸ்கள் தோன்றிக்கொண்டே இருக்கின்றார்கள். எந்த போதனைகளை அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக நமக்கு வழங்கியுள்ளானோ அவற்றை வெளிப்படையான நூலின் வடிவத்திலும் பாதுகாத்து வைத்திருக்கின்றான். அதனை மனிதர்களது உள்ளத்திலும் மூளையிலும்

பதிந்திருக்கும்படியும் செய்து விட்டான். எவ்வாறு திருக்குர்ஆனை அல்லாஹ் பாதுகாத்துள்ளானோ அவ்வாறு மற்ற நபிமார்கள் மீது இறக்கிய போதனைகளையும் கட்டளைகளையும் அல்லாஹ் பாதுகாக்கவில்லை. திருக்குர்ஆனைத் தவிர வேறு எந்த வேதநூலும் அதன் ஒவ்வொரு சொல்லும் இறைவன் தனது இல்ஹாம் மூலம் இறக்கிய அதே வடிவத்தில்தான் இன்றும் இருந்து வருகிறது என்று வாதம் செய்ய முடியாது. ஆனால் திருக்குர்ஆன் இறக்கப்பட்ட முதல் நாளிலிருந்தே அது எவ்வாறு இறக்கப்பட்டதோ அதே வடிவத்தில் இன்றும் பாதுகாப்பாக இருக்கின்றது என்று வாதம் செய்கின்றது. இன்னும் சொல்வதென்றால் அதிலுள்ள ஸேர், ஸபர், பேஸ் போன்ற அச்சரங்களும், எங்கு ஓதுவதை நிறுத்த வேண்டும், எங்கு நிறுத்தக் கூடாது போன்ற குறியீடுகளும்கூட மாறாத வகையில் அல்லாஹ் இந்த வேதத்தை பாதுகாப்பதற்கான ஏற்பாட்டை செய்துள்ளான். இப்படிப்பட்ட மகத்தான ஷரீஅத்தை முழுமையடைய செய்து விட்டு அது தொடர்பாக அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

**அல்யவ்ம அக்மல்து லகும் தீனகும் வஅத்மம்து அலைக்கும் நிஹ்மதி வ ரழீத்து லகுமுல் இஸ்லாம தீனா** - இன்று நான் உங்களது நன்மைக்காக உங்கள் மார்க்கத்தை முழுமையாக்கியுள்ளேன்.மேலும் உங்களுக்கு முன் அருளை நிறைவு செய்துள்ளேன். மேலும் உங்களுக்கு மார்க்கமாக இஸ்லாத்தை தேர்ந்தெடுத்துள்ளேன் (5:4)

இந்த அறிவிப்பானது எங்கு ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களது துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான அறிவிப்பை செய்கின்றதோ அங்கு இந்த மகத்தான தூதர் மீது எல்லா அருள்களும் நிறைவடைந்து தேவையான அனைத்து கட்டளைகளும் ஒன்றுசேர்க்கப்பட்டு கடந்த கால ஷரீஅத்தைப் பற்றியும் எடுத்துக் கூறி ஷரீஅத்தின் எல்லா கட்டளைகளின் உயர்வான நிலையும் எடுத்துக் கூறப்பட்டு இந்த ஷரீஅத் முழுமையடைந்து விட்டது என்று அல்லாஹ் அறிவித்திருக்கின்றான். எந்தவொரு கடந்த கால ஷரீஅத்தும் இதனை எதிர்த்து நிற்க முடியாது. எந்தவொரு கடந்த கால வேத நூலாலும் திருக்குர்ஆனுடன் போட்டிபோட முடியாது. உண்மையில் இந்த வேதம் மட்டும்தான் **அல்கிதாப்** (முழுமையான வேதம்) என்று தன்னை கூறுவதற்குரிய தகுதியைப் பெற்றிருக்கின்றது. மார்க்க சட்டங்கள் பற்றியும் மத சம்பந்தமான விஷயங்கள் பற்றியும் மட்டுமல்லாமல் இந்த வேதம் அறிவார்ந்த விஷயங்கள் தொடர்பாகவும் விஞ்ஞானம் தொடர்பாகவும் பல விஷயங்களை விளக்கி கூறியிருக்கின்றது. இப்படிப்பட்ட விஷயங்களை முந்தைய வேதங்களைப் பின்பற்றிய மக்கள் அவர்கள் வாழ்ந்த காலத்தில் புரியவே முடியாமல் இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் கூட அவர்களைத் தவிர ஒருவேளை வேறு எவராலுமே இப்படிப்பட்ட விஷயங்களை புரிந்திருக்க முடியாது. எதிர்காலம் பற்றிய பல முன்னறிவிப்புகள் திருக்குர்ஆனில் கூறப்பட்டிருக்கின்றது. இதுதான் இந்த வேதம் தன்னை **அல்கிதாப்** (முழுமையான வேதம்) என்று கூறியிருப்பதன் சிறப்பாகும். அதாவது இதில் எல்லா விதமான ஞானங்களையும் இறைவன் ஒன்றுசேர்த்து வைத்ததுடன் அவற்றை அதன் அசல் வடிவத்தில் பாதுகாத்து வைத்திருக்கின்றான். இந்த மகத்தான ரஸூல் (ஸல்) அவர்கள் மீது இறங்கியுள்ள இந்த வேதத்தை நான் பாதுகாப்பேன். எவராலும் இதனை மாற்ற முடியாது என அவன் வாக்குறுதி வழங்கியுள்ளான்.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

**இன்னா நஹ்னு நஸ்ஸல்னஸ்ஸிக்ர வ இன்னா லஹூ ல ஹா∴பிளூன்** - இந்த திக்ரை அதாவது திருக்குர்ஆனை நாமே வழங்கியுள்ளோம். நாமே இதனை பாதுகாப்போம். அல்லாஹ் இந்த வேதத்தை பாதுகாப்பதற்கான ஏற்பாட்டை அந்த வேதம் தோன்றிய ஆரம்ப நாட்களிலிருந்தே செய்து வருகின்றான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது காலத்திலேயே திருக்குர்ஆன் எழுதப்பட்டு தொடர்ந்து அது பாதுகாக்கப்பட்டும் வந்திருக்கின்றது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த வேதத்தை நாமே இறக்கினோம். நாமே இதனை பாதுகாப்போம் என்று இறைவன் அளித்துள்ள வாக்குறுதி ஒரு முன்னறிவிப்பாக இருக்கின்றது. கடந்த 1300 வருடங்களாக இந்த முன்னறிவிப்பின் உண்மைகள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதுவரை சென்ற கால வேதங்களைப் போல் திருக்குர்ஆனில் இறைவனுக்கு இணை வைக்கின்ற எந்த போதனையும் கலந்துவிடவில்லை. வருங்காலத்திலும் இறைவனுக்கு இணை வைக்கின்ற போதனைகள் திருக்குர்ஆனில் கலந்து விடலாம் என்பதை அறிவும் ஏற்றுக் கொள்ளாது. ஏனென்றால், லட்சக்கணக்கான முஸ்லிம்கள் அதனை மனனம் செய்துள்ள ஹாஃபிஸ்களாக இருக்கின்றார்கள். அதற்கு ஆயிரக்கணக்கான தஃப்ஸீர்கள் எழுதப்பட்டுள்ளன.

அதன் வசனங்கள் ஐவேளை தொழுகைகளில் ஓதப்படுகின்றது. ஒவ்வொரு நாளும் திருக்குர்ஆனை மக்கள் ஓதுகின்றார்கள். இவ்வாறு எல்லா நாடுகளிலும் திருக்குர்ஆன் பரவிவிட்டதும் அதன் கோடிக்கணக்கான எழுத்துப் பிரதிகள் உலகில் இருப்பதும் எல்லா சமுதாயங்களுக்கு அதன் போதனைகள் தெரிய வருவதும் போன்ற எல்லா விஷயங்களையும் நாம் பார்க்கும்போது இவற்றின் அடிப்படையில் வருங்காலத்திலும் இந்த வேதத்தில் ஏதாவது மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பேயில்லை என்பதை அறிவு உறுதியாக ஏற்றுக் கொள்கின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறி 100 வருடங்கள் கழிந்த பிறகும் கூட இன்றுவரை அல்லாஹ் திருக்குர்ஆனை பாதுகாத்து வைத்துள்ளான். இந்த காலத்தில் தஜ்ஜாலிய சக்திகள் திருக்குர்ஆனில் மாற்றங்களை ஏற்படுத்த முயன்றன. அதற்காக திட்டங்கள் தீட்டப்பட்டது. ஆனால் ஒருபோதும் இந்த முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்காது. இதற்கு முன்னரும் நாம் கூறியிருந்ததை போன்று திருக்குர்ஆனில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் திருக்குர்ஆனுக்கு எதிராக ஒரு புதிய குர்ஆனை உருவாக்குவதற்கும் கிறிஸ்தவர்கள் திட்டம் தீட்டி செயல்படுகின்றார்கள். அது மிகப்பெரிய அபாயகரமான திட்டமாக இருந்தது. மேலும் இந்த புதிய குர்ஆனை இவர்கள் முதன் முதலில் **வுர்கானுல் ஹக்** என்ற பெயரில் வெளியிட்டார்கள். திருக்குர்ஆனின் சொற்களுடன் தாங்களாகவே உருவாக்கிய சில சொற்களையும் கலந்து சில வசனங்களை அவர்கள் உருவாக்கினார்கள். அவர்களாகவே சில அதிகாரங்களையும் உருவாக்கினார்கள். ஶடஷ்ற்ப்ஷ்தூதிஈநிதூ க்ஷிஹீஉகிஈஹீ தரப்பிலிருந்தும் இதன் முதல் வெளியீடு 1999 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. மேலும் அவர்களது எண்ணத்திற்கேற்ப வரவேண்டிய மஸீஹ் பற்றி தெரிவிப்பதற்குரிய எளிதான வழி அவர்கள் முதலிலேயே முஸ்லிம்களுக்கு கவனமூட்டும் வகையில் **வுர்கானுல் ஹக்** என்ற நூலை வெளியிடுவதுதான் சிறந்தது என்று அவர்கள் நினைத்தார்கள். இந்த சமயத்தில் குவைத்தில் கூட இந்த நூல் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்கப்படுவதாக செய்திகள் வெளிவந்தன. இது தொடர்பாக ஶகிநிவ்திஈ ரூஷ்வுஞ் இடம் இது பற்றிய முழுமையான தகவல்களை அறிந்து எனக்கு தெரிவிக்கும்படி நான் கூறியிருந்தேன். ஆனால் இதுவரை அவர்களிடம் இருந்து இது தொடர்பான ரிப்போர்ட் எனக்கு கிடைக்கவில்லை. அவர்கள் அதிகம் காலதாமதம் ஆக்கி விட்டார்கள். இதுபற்றி அவர்கள் தெரிவிக்க வேண்டும். இரண்டு வருடங்களுக்கு முன்பு மீண்டும் இந்த செய்தி எல்லா இடங்களிலும் வெளிவந்தது. முதன் முதலாக இந்த நூல் அமெரிக்காவிலிருந்து வெளியிடப்பட்டது.

இதைத் தவிர திருக்குர்ஆனில் மாற்றங்களை ஏற்படுத்த இன்னொரு முயற்சியும் நடந்திருக்கின்றது. முஸ்லிம்களிலேயே ஒரு பிரிவினர் ஷரீஅத்திற்கு எதிராக நிற்பவர்களாக இருந்தார்கள். திருக்குர்ஆனில் போர்கள் தொடர்பாகவும், ஜிஹாது தொடர்பாகவும் எத்தனை வசனங்கள் இருக்கின்றதோ அவை அனைத்தையும் திருக்குர்ஆனிலிருந்து எடுத்து விட வேண்டும் என்று இவர்கள் விரும்பினார்கள். மற்றவர்களின் கருத்துக்கு ஒத்துப்போக வேண்டும் என்ற எண்ணத்தில் மிகுந்த கோழைத்தனத்தை வெளிப்படுத்தக் கூடியவர்களாக இருக்கும் இந்த பிரிவை சார்ந்தவர்கள் மேற்கத்திய உலகை மகிழ்விக்க விரும்புகின்றார்கள். வேறு சொற்களில் கூறுவதாயிருந்தால் இவர்கள் கிறிஸ்தவர்களை மகிழ்விக்க விரும்புகின்றார்கள். அல்லது மார்க்கத்துடன் இவர்களுக்கு எவ்வித ஈடுபாடும் இல்லை.

திருக்குர்ஆனில் மாற்றங்களை ஏற்படுத்தி முஸ்லிம்களுக்குள் பிரிவினையை ஏற்படுத்த இவர்கள் விரும்புகின்றார்கள். இந்த முயற்சிகளை கிறிஸ்தவர்கள் செய்தாலும் தங்களை முஸ்லிம்கள் என்று கூறிக்கொண்டு தங்களது ஆணிவேரையே வெட்டி வீசுவதற்கு முயற்சி செய்கின்ற இந்த பிரிவு முயற்சிகள் செய்தாலும் அல்லது நயவஞ்சகத்துடன் செயல்படும் எந்த மனிதர்கள் இந்த திருக்குர்ஆனை மாற்றுவதற்கு முயற்சி செய்தாலும் இதில் அவர்கள் ஒருபோதும் வெற்றி பெற முடியாது. அல்லாஹ் இதற்கான வாக்குறுதியை வழங்கியுள்ளான்.

இவர்கள் அனைவரும் உலகக்கண் கொண்டு மட்டும் இந்த திருக்குர்ஆனை பார்க்கின்றார்கள். எவ்வாறு பைபிளில் மனிதனின் தலையீடு ஏற்பட்டு விட்டதோ இவ்வாறு திருக்குர்ஆனிலும் மனிதக் கரங்களால் மாற்றத்தை ஏற்படுத்தி விடலாம் என்று இவர்கள் நினைக்கின்றார்கள். ஆனால், பைபிளுடனோ அல்லது வேறு எந்த ஒரு வேதநூலைப் பற்றியோ திருக்குர்ஆனை பாதுகாப்பதாக இறைவன் வாக்குறுதி அளித்ததைப் போல் அவற்றையும் பாதுகாப்பதாக அல்லாஹ் வாக்குறுதி தரவில்லை. திருக்குர்ஆனுக்கு மட்டும்தான் இந்த வாக்குறுதி வழங்கப் பட்டிருக்கின்றது. இதற்கான காரணம் இந்த திருக்குர்ஆன் அந்த மகத்தான

தூதர் (ஸல்) அவர்கள் மீது இறங்கியுள்ள வேதமாகும். அதன் போதனைகள் கியாமத் நாள் வரை நிலைநிற்க வேண்டியதிருக்கிறது.

எனவே, முஸ்லிம்களானாலும் மற்றவர்களானாலும் அவர்களுக்கு இறைவன் மீது நம்பிக்கை இருந்தால் இந்த ஒரேயொரு வேதம் மட்டும்தான் அதன் அசல் வடிவத்தில் இருக்கின்றது என்பதை பார்த்து விட்டு தீய திட்டங்களைத் தீட்டி தீங்கு விளைவிக்க முயற்சி செய்வதற்குப் பகரமாக இந்த வேதத்தின் போதனைகளை அவர்கள் சிந்திக்க வேண்டும். ஒரு பக்கம் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் அந்த மகத்தான தூதர் மூலம் ஒரு வேதமும் அதன் போதனைகளும் நமக்கு கிடைக்க வேண்டும் என்று துஆ செய்தார்கள். மறுபக்கம் அந்த துஆவை நான் ஏற்றுக் கொண்டேன் என்று இறைவன் கூறுகின்றான். மேலும் அந்த மகத்தான தூதர் அரபு நாட்டில் தோன்றினார். அவர் இந்த வேதத்தின் போதனைகளை மக்களுக்கு வழங்கினார். அந்த போதனைகளின் தாக்கத்தை உலகம் கண்டு கொண்டது. அவ்வாறிருந்தும் விரோதத்துடன் பரிமாறுபவர்கள் தங்களது கண்களில் திரையிட்டுக் கொண்டதன் விளைவாகவே இவ்வாறு செய்கின்றார்கள். அல்லது இறைவன் மீது அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. அல்லது முழுக்க முழுக்க தீங்கு விளைவிப்பதும் குழப்பம் விளைவிப்பதும் மட்டுமே இவர்களது நோக்கமாக இருக்கின்றது. இந்த வேதம் இறுதி வேதமாக இருக்கின்றது. நமது தூதர் (ஸல்) அவர்களும் காத்தமுல் அன்பியாவாக இருக்கின்றார்கள். எனவே, அவர்களைப் பின்பற்றாமல் எவரும் இனி தூதராக வர முடியாது. அவ்வாறே இனி ஒரு புதிய வேதமும் வர முடியாது. நீங்கள் சூழ்ச்சி செய்ய முயற்சிகள் செய்தால் செய்து கொண்டிருங்கள். ஆனால், இந்த முயற்சியில் நீங்கள் வெற்றி பெற முடியாது.

இந்த வேதத்தை பாதுகாப்பதையும் இந்த ஷரீஅத்தை பாதுகாப்பதையும் அல்லாஹ் தனது சிறப்பான அடியார்கள் மூலம் செய்து கொண்டேயிருப்பான். தஜ்ஜாலை கொலை செய்கின்ற அந்த அல்லாஹ்வின் பயில்வானும் இந்த காலத்தில் தோன்றி விட்டார். எனவே, நீங்கள் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் ரஹ்மானின் அடியார்களுக்கு ஷய்த்தானின் அடியார்களுக்கிடையில் நடைபெறும் இறுதிப் போராக இது இருக்கின்றது. இதில் நிச்சயமாக ரஹ்மானின் அடியார்கள் வெற்றி பெறுவார்கள். இவ்விஷயத்தில் சூழ்ச்சி செய்ய எதிரிகளுக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது கூட அல்லாஹ்வின் விருப்பத்தின்படிதான் நிகழ்ந்திருக்கின்றது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதுபற்றி முன்னறிவிப்பு செய்துள்ளார்கள். இதன் மூலமாக அல்லாஹ் எல்லா ஆற்றல்களின் உறைவிடமும் நான்தான் என்பதை வெளிப்படுத்த விரும்புகின்றான். ஏதாவதொரு விஷயம் தொடர்பாக நான் முடிவெடுத்தால் அந்த முடிவுதான் செயல்படும் என்று அல்லாஹ் கூறியுள்ளான். எனவே, நமக்கு இந்த விஷயங்கள் குறித்த எந்தக் கவலையும் இல்லை. இவர்கள் தங்களது முயற்சியில் வெற்றி பெற்றுவிடுவார்களோ என்ற கவலை ஒருபோதும் நமக்கு இல்லை. சில முட்டாள்கள் அல்லது குறைந்த அறிவுடையவர்கள் வீணாகிப் போவதற்கான அபாயம் இருக்கின்றது. இப்படிப்பட்டவர்களது பேச்சைக் கேட்டு முஸ்லிம்களில் பலர் வழி தவறி வீணாகி விடுகின்றார்கள். சிலர் தீங்கு விளைவிக்கும் நோக்கத்துடனேயே இவ்வாறு செயல்படுகின்றார்கள். சிலர் அப்பாவித்தனமாக எதிரிகளின் வலையில் சிக்கிக் கொள்கின்றார்கள். தங்களை முஸ்லிம்கள் என்று கூறிக்கொண்டு தங்களுக்கு வழங்கப்பட்ட போதனைகளின் சில பகுதிகளிலிருந்து முகம் திருப்பிச் செல்லக் கூடியவர்கள் கவலையடைவதற்குப் பகரமாக இந்த காலத்தில் தோன்றியுள்ள அல்லாஹ்வின் பயில்வானிடமிருந்து இந்த வேதத்தின் போதனைகளை புரியும் திறனைப் பெற வேண்டும். அவர்களிடமிருந்து இந்த போதனைகளை அவர்கள் கற்க வேண்டும். அதன் மூலமாக எது சரி? எது தவறு? என்பது அவர்களுக்கு தெரிய வரும். திருக்குர்ஆனின் கட்டளைகள் நிரந்தரமாக இருப்பவையாகும். அவை எப்போதும் நிரந்தரமாக இருக்கும். அதன் ஒவ்வொரு எழுத்தையும் பாதுகாக்கும் பணியை அல்லாஹ் அது இறக்கப்பட்ட நாளிலிருந்தே செய்து வருகின்றான். இனியும் செய்து வருவான். இன்ஷா அல்லாஹ். இது அவனது வாக்குறுதியாகும்.

திருக்குர்ஆன் எப்படிப்பட்ட வேதம் என்றால் அதனை எவரும் மாற்ற முடியாது. சில முஸ்லிம்கள் திருக்குர்ஆனின் சில போதனைகள் இப்போது ரத்து செய்யப்பட வேண்டும் என்று நினைக்கின்றார்கள். இவர்கள் திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள இந்த போதனைகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பராக திகழ்கின்ற இந்த காலத்தின் இமாமின் மூலமாக புரிய வேண்டும். இந்தக் காலத்தில் அவர்களைத்தான் அல்லாஹ் நேரடியாக இந்த பணிக்கென்று நியமித்துள்ளான். திருக்குர்ஆனின் போதனைகள் பற்றி ஒரு முக்கியமான விஷயத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

***கிதாப்*** என்பதற்கு கட்டளைகள், கடமைகள் என்ற பொருளும் இருக்கின்றது. திருக்குர்ஆனில் சில

கட்டளைகள் வந்துள்ளன. சில கடமைகள் பற்றி எடுத்துக் கூறப்பட்டுள்ளது. கடமைகள் கண்டிப்பாக நிறைவேற்றப்பட வேண்டியவையாக உள்ளன. ஃபர்ளான அந்தக் கடமைகளில் எவ்வித மாற்றத்தையும் நாம் செய்ய முடியாது. மிகவும் தெளிவாக அவை கூறப்பட்டிருக்கின்றது.

கட்டளைகளில் அவ்வப்போதுள்ள சூழ்நிலைக்கேற்ப சில சமயங்களில் கூடுதல் அல்லது குறைதல் இருக்கும். இந்த கட்டளைகளில் சில கட்டளைகள் தனிப்பட்ட நபருக்கான கட்டளைகளாக இருக்கும். வேறு சில கட்டளைகள் முழு ஜமாஅத்துடனும், சமுதாயத்துடனும் தொடர்புடைய கட்டளைகளாக இருக்கும். தனிப்பட்ட நபருக்கான கட்டளைகளில் அந்த நபருடைய சில குறிப்பிட்ட சூழ்நிலையின் காரணமாக அல்லது தவிர்க்க முடியாத காரணங்களால் அவருக்கு சில உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றது. உதாரணமாக, ஃபர்ளான ஐவேளை தொழுகைகள் தொழுவதற்கு அல்லது தொழாமல் இருப்பதற்கு அந்த தனி நபருக்கு உரிமை இருக்கின்றது. பிறகு தொழுகைகளை நிறைவேற்றுவதற்கென்று சில நிபந்தனைகள் இருக்கின்றது. நின்றவாறு தொழ வேண்டும். உளூ இருக்கும் நிலையில் தொழ வேண்டும். இப்படிப்பட்ட கட்டளைகள் இருக்கின்றது. ஆனால் அத்துடன் நோயாளிக்கும் பயனளிக்கும் சில வசதிகள் வழங்கப்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட முழுமையான போதனைகளைத்தான் திருக்குர்ஆன் நமக்கு தந்திருக்கின்றது. இவ்வாறான பல உதாரணங்களை நாம் கூற முடியும்.

அடுத்து சமுதாயங்களுடன் தொடர்புடைய எல்லாருக்குமுரிய கட்டளைகள் இருக்கின்றன. உதாரணமாக, ஜிஹாது செய்வதற்கான அல்லது போர் செய்வதற்கான கட்டளை திருக்குர்ஆனில் கூறப்பட்டிருக்கின்றது. இந்த போதனைகளைக் கண்டு இவற்றில் மாற்றங்களை செய்ய விரும்பும் அந்த பிரிவுக்கு வெட்கம் ஏற்படுகின்றது. முதல் விஷயம் எந்த நாடுகளுக்குப் பின்னால் சென்றவாறு அவர்கள் கூறுவதற்கு ஒத்து ஊதுகின்ற இவர்கள்; கோழைத்தனத்தில் முன்னேறியவாறு அவர்களை மகிழ்விக்க விரும்புகின்ற இவர்கள் அந்த நாட்டிலுள்ளவர்கள் போர் செய்வதில்லையா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அவர்களது வரலாறு கொடுமையான போர்களால் நிறைந்த காணப்படுகிறது. இந்த காலத்திலும் சில நாடுகள் மீது அநியாயமாக இவர்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றார்கள். அதனால் தொடர்ந்து போருக்கான சூழ்நிலை இருந்து வருகிறது. எனவே முஸ்லிம்கள் வெட்கப்படுவதற்குப் பகரமாக இவர்களை வெட்கப்படும்படி செய்ய வேண்டும். நீங்கள் கூறுவதென்ன? செய்வதென்ன? என உண்மையான முஸ்லிம்கள் என்று தங்களைக் கூறுபவர்கள் இவர்களிடம் கேட்க வேண்டும்.

இரண்டாவதாக திருக்குர்ஆனில் எங்கு ஜிஹாதிற்கான கட்டளை இருக்கின்றதோ அங்கு வாள் மூலமாக செய்யப்படும் போர் வடிவிலான ஜிஹாதிற்கென்று சில நிபந்தனைகள் கூறப்பட்டிருக்கின்றது. அதாவது உங்கள் மீது எவராவது கொடுமையிழைத்தால் அல்லது தாக்குதல் நடத்தினால் அந்த அநீதிக்குப் பதிலடி கொடுங்கள். ஆனால் போர் செய்பவர்கள் ஆயுதத்தை கீழே போட்டு விட்டு போர் செய்வதிலிருந்தும் விலகி விட்டால் அதற்குப் பிறகும் சாக்குப் போக்குகளைத் தேடக் கூடாது. அவர்களை கொலை செய்ய முயற்சி செய்யக் கூடாது. இவ்வாறு பல எண்ணற்ற கட்டளைகள் திருக்குர்ஆனில் இருக்கின்றது. போர்க் கைதிகளுடன் நீதியாக நடந்து கொள்ள வேண்டும்; மேலும் வாளாலும் துப்பாக்கியாலும் போர் செய்ய வேண்டும் என்றால் அதற்கான முடிவை உங்கள் மேலதிகாரிகளாக இருப்பவர்கள் எடுக்க வேண்டும் ; எந்தவொரு தனி நபரும் இந்த முடிவை எடுக்கக் கூடாது. இந்த காலத்தில் அல்லாஹ் நீதிநெறி தீரப்பவராக எவரை அனுப்பியுள்ளானோ எவர் இந்த வேதத்தின் போதனைகளுக்கு ஏற்ப இது பற்றி முடிவு எடுக்க வேண்டுமோ அவர்தான் அல்லாஹ்வின் பார்வையில் இப்போது எந்த செயல் அவனுக்குப் பிரியமானது என்பது பற்றி முடிவு செய்வார். அல்லாஹ்வின் கட்டளைகள் தொடர்பான சரியான விளக்கத்தையும் அவர்தான் கூற வேண்டியதிருக்கின்றது. அந்த நீதிநெறி தீர்ப்பவர் இந்த காலத்தில் எனது வருகையுடன் அம்பு, வாள், துப்பாக்கி ஆகியவற்றால் செய்யப்படும் போர் நிறுத்தப்பட்டுவிட்டது என்று தீர்ப்பளித்துள்ளார். இப்போது எதிரிகள் பயன்படுத்தும் அதே ஆயுதங்களை நீங்களும் ஜிஹாதிற்காக பயன்படுத்துங்கள். எதிரிகள் பிரசுரங்கள் மூலமாகவும் தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலமாகவும் இஸ்லாத்திற்கு எதிராக வெறுப்பை பரப்பி வருகின்றார்கள். எனவே, நீங்களும் பிரசுரங்கள் மூலமாக இவற்றை தடுத்து நிறுத்துவதுடன் திருக்குர்ஆனின் போதனைகளை பரவும்படி செய்து, இந்த ஒரு போதனைதான் இரட்சிப்பைத் தரக்கூடிய உண்மையான போதனையாக இருக்கின்றது என்பதை நிரூபித்துக் காட்டுங்கள் என்று அவர்கள் கூறினார்கள்.

ஏனென்றால், இந்த போதனைகளே இறைவனின் போதனைகளாக இருக்கின்றது. இவர்கள் ஏமாற்று வேலைகளை செய்து திருக்குர்ஆனின் நடைக்கேற்ப ஒரு புத்தகத்தை வெளியிட்டு கிறிஸ்தவத்தின்

போதனைகளை பரப்பும் போது நீங்கள் அதற்கான மறுப்பை தெரிவிக்க வேண்டும். எனவே இப்போது போதனைகள் மூலமாகவும் அறிவுப்பூர்வமான சான்றுகள் மூலமாகவும் செய்யப்படும் ஜிஹாதே உண்மையான ஜிஹாது ஆகும். வாளால் போர் புரிவது மட்டும் ஜிஹாது அல்ல. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் சஹாபாக்களும் ஜிஹாது என்பதற்கு இந்த ஒரு பொருளை மட்டும் கொடுக்கவில்லை. அவ்வாறு அவர்கள் கருதவில்லை. மாறாக, மிகப்பெரும் ஜிஹாது திருக்குர்ஆனின் போதனைகளுக்கு ஏற்ப செயல்படுவதும் திருக்குர்ஆனின் கட்டளைக்கேற்ப தங்களை வடிவமைத்துக் கொள்வதுமேயாகும். அரசாங்கத்தின் மீது எவராவது தாக்குதல் நடத்தினால் அது போர் வடிவிலான ஜிஹாது மூலம் அரசாங்கம் அதற்கு பதிலடி கொடுக்கும். ஆனால், தனிப்பட்ட அமைப்புகள் இந்த பணியைச் செய்யக் கூடாது. உங்களது இந்த முயற்சி சிறு பிள்ளைத்தனமான முயற்சியாக இருக்கின்றது என்பதை நாம் ஆதாரங்கள் மூலமாக நிரூபித்துக் காட்ட வேண்டும். இதுவே ஜிஹாது என்று இந்த அறிவுக் குருடர்களுக்கு நாம் தெரிவிக்க வேண்டும். அந்த புத்தகத்தை நாம் பார்க்கின்ற போது வெளிப்படையாகப் பார்க்கும் போது, மிகப் பெரும் அறிவாளிகள் அதனை உருவாக்கி இருப்பதாக அவர்கள் வாதம் செய்தாலும் அது மிகவும் சிறு பிள்ளைத்தனமான முயற்சியாக இருப்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியும். சாதாரண அறிவு படைத்த மனிதனும் கூட அந்தப் புத்தகத்தைப் பார்த்ததுமே அது மனிதனின் முயற்சியால் உருவாகி இருக்கின்றது என்பதை புரிந்து கொள்வான்.

எவ்வாறிருப்பினும் திருக்குர்ஆன் அது அருளப்பட்ட நாளிலிருந்து அதன் அசல் வடிவில் பாதுகாக்கப்பட்டு வருவது பற்றி நான் கூறிக் கொண்டிருந்தேன். நானே இந்த வேதத்தை பாதுகாப்பேன் என்று இறைவன் அளித்த வாக்குறுதிக்கு ஏற்ப திருக்குர்ஆன் பாதுகாக்கப்பட்டு வருவது தொடர்பாக இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாத பல வரலாற்று ஆசிரியர்கள் கூட அவர்கள் இஸ்லாமிய போதனைகளை திரித்து மக்களிடம் வேறு விதமாக கூறினாலும் திருக்குர்ஆன் அது அருளப்பட்ட நாளிலிருந்து அதன் அசல் வடிவில் பாதுகாக்கப்பட்டு வருவதை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறு அவர்களது நாவுகளிலிருந்து இந்த கருத்தைக் கூறும்படி செய்ததும் அல்லாஹ்வின் மகத்தான உதவியாக இருக்கின்றது.

நம்மை வந்தடைந்திருக்கும் இந்தக் குர்ஆன் உண்மையிலேயே முஹம்மத் அவர்களால் தொகுக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டு இருக்கின்ற அதே குர்ஆனே ஆகும். இன்று நம்மிடம் இருக்கின்ற இந்தக் குர்ஆன் உண்மையில் முஹம்மதின் எழுத்துக்களேயாகும்.

திருக்குர்ஆனில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்த முடியவில்லை என்பது மிகவும் உறுதியான ஒரு உண்மையாகும். ஹஸ்ரத் முஹம்மத் அவர்கள் கூறிய அதே சொற்களில்தான் முழுமையான எச்சரிக்கையுடன் இன்றுவரை திருக்குர்ஆன் பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்பதும் மிகவும் உறுதியான ஓர் உண்மையாகும்.

12 நூற்றாண்டுகள் கடந்த பிறகும் திருக்குர்ஆனின் வடிவம் சொல்லுக்கு சொல் அப்படியே சரியாகப் பாதுகாக்கப்பட்டு வந்ததுபோல உலகில் வேறு எந்த ஒரு எழுத்தும் பாதுகாக்கப்படவில்லை.

இன்றைய காலகட்டத்தில் நமக்கு கிடைத்திருக்கின்ற திருக்குர்ஆனின் எல்லா பகுதிகளும் திருக்குர்ஆனின் அசல் பிரதியிலிருந்து நேர்மையுடன் எடுக்கப்பட்டு அச்சிடப்பட்டுள்ள நகல்களாகும். திருக்குர்ஆன் தொடர்பாக ஏதாவது ஒரு பகலில் அல்லது இரவில் அதில் ஏதாவது ஒரு மாற்றம் ஏற்பட்டிருப்பதற்கான தடையம் நமக்குக் கிடைக்கவில்லை.

நமக்கு கிடைத்திருக்கும் வெளிப்படையான மற்றும் அந்தரங்கமான சாட்சிகளின் அடிப்படையில் பார்க்கும்போது நம்மிடம் இருக்கின்ற இந்த குர்ஆன் முஹம்மது அவர்கள் அன்று உலகின் முன் எடுத்து வைத்த அதே குர்ஆனே ஆகும். அந்தக் குர்ஆனைத்தான் முஹம்மது பயன்படுத்தி வந்தார்.

“முஹம்மது அவர்களின் எழுத்துக்களில் ஒருவேளை சில பிழைகள் இருக்கலாம். ஆனால், உஸ்மான் அவர்கள் உலகிற்கு தந்த அந்தக் குர்ஆனில் உள்ள கருத்துக்கள் முஹம்மது உலகிற்குத் தந்துள்ள அதே கருத்துக்களே ஆகும். இதன் வரிசை மிகவும் வியக்கத்தக்க வகையில் அமைக்கப்பட்டு இருக்கின்றது. திருக்குர்ஆனில் கூடுதலாக சில பகுதிகள் இணைக்கப்பட்டுள்ளதாக ஐரோப்பிய வரலாற்றாசிரியர்களில் பலர் நிரூபிக்க முயற்சி செய்த பிறகு அந்த முயற்சியில் முழுமையாக அவர்கள் தோல்வி அடைந்துள்ளார்கள்.”

***கிதாப்*** என்பதன் ஒரு பொருள், ஒன்று திரட்டப்பட்டவை என்பதாகும். இந்த வகையில் ***அல் கிதாப்*** ஆக இருக்கின்ற திருக்குர்ஆனில் எல்லாவிதமான போதனைகளும் ஒன்று திரட்டப்பட்டிருக்கின்றது. மார்க்க பொருளாதார நாகரீக விஞ்ஞான அறிவுகள் அனைத்தும் இதில் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கின்றது.

நல்லொழுக்க போதனைகளும் இருக்கின்றது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

***ஸாலிகல் கிதாப்*** - அதாவது இறைவனது அறிவால் உருவான அந்த வேத நூல் இதுவேயாகும். இதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இறைவனது அறிவு எல்லா அறிவுகளை விடவும் முழுமையானதாக இருக்கின்றது. இதில் ஒன்று திரட்டப்பட்டுள்ள போதனைகளை அல்லாஹ் தனது முழுமையான அறிவைக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறக்கினான். ஏனென்றால், ஷரீஅத் முழுமையடைந்து கொண்டிருந்தது. எனவே, இவ்வாறு திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள எல்லா போதனைகளும் இந்த அளவு உயர்வான நிலையில் வேறு எந்த வேத நூலிலும் இடம்பெற வில்லை.

எல்லா அறிவுகளின் உறைவிடமாக இருக்கக் கூடிய நான் உங்களுக்குத் தெரிவிப்பது இந்த வேத நூலில் கூறப்பட்டுள்ள போதனைகள் மிக உயர்வான நிலையில் இருப்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அதற்கு எவ்வித வாய்ப்பும் இல்லை. நீங்கள் இலட்சக்கணக்கான முறை முயற்சி செய்து பார்த்தாலும் இதுபோன்ற ஒரு வேத நூலை உருவாக்க முடியாது என்பதையே ***லா ரய்ப ஃபீஹி*** என்ற வசனத்தில் அல்லாஹ் கூறியுள்ளான். ஏமாற்றுகின்ற வேலைகளை நீங்கள் செய்வீர்கள். ஆனால், அதை செய்ததும் நீங்கள் குருடர்களாகி விடுவீர்கள். இவர்கள் உருவாக்கியுள்ள நூலை சாதாரண அறிவு படைத்த ஒருவர் பார்த்தாலும் அவரால் அதிலுள்ள மனிதத் தலையீட்டை புரிந்து கொள்ள முடியும். அதிலுள்ள குறைகளையும் எந்த அளவு ஒழுங்கற்ற நிலையில் அவற்றின் சொற்கள் இணைக்கப்பட்டுள்ளன என்பதையும் புரிந்துகொள்ள முடியும்.

திருக்குர்ஆனின் போதனைகளின் சுருக்கமே ஏகத்துவத்தை நிலை நாட்டுவதே ஆகும். அதன் போதனைகள் அனைத்துமே தவ்ஹீதை சுற்றித்தான் வரும். அவர்கள் முஸ்லிம்களை சீர்குலைக்க முயற்சி செய்தாலும் இவர்கள் எழுதியுள்ள இந்த நூலின் ஆரம்பத்திலேயே முத்தெய்வ கொள்கையை (விகிதிற்திலுபீ) பற்றி கூறப்பட்டிருக்கின்றது. இவர்கள் கூறியுள்ள வசனத்தில் ஏகத்துவத்தை எடுத்துக் கூறிவிட்டு பிறகு முத்தெய்வக் கொள்கைகளை ஏகத்துவக் கொள்கையாக எடுத்துக் கூறியுள்ளார்கள். திருக்குர்ஆனின் அடிப்படை அறிவுள்ள முஸ்லிம்கள் எவ்வாறு இதனை ஏற்றுக் கொள்வார்கள். முதலில் தவ்ஹீது பற்றி எடுத்துக்கூறிவிட்டு சுற்றி வளைத்தவாறு அதில் முத்தெய்வக் கொள்கையை புகுத்தி இருந்தாலாவது இவர்கள் தந்திரமாக செயல்படுகின்றார்கள் என்று நம்மால் கூற முடியும். ஆனால், இவர்களது முட்டாள்தனம் எந்த அளவு தெளிவாக வெளிப்பட்டு இருக்கின்றது என்றால் அவர்களாக உருவாக்கிய ஒரு வசனத்தை நூலின் ஆரம்பத்திலேயே அவர்கள் எழுதியுள்ளார்கள். அதில் ஏகத்துவம் பற்றியும் வருகிறது. முத்தெய்வ கொள்கைகள் பற்றியும் கூறப்பட்டிருக்கின்றது. அதில் கூறப்பட்டுள்ள வீணான விஷயங்களை இங்கு குறிப்பிட வேண்டிய அவசியம் நமக்கில்லை.

திருக்குர்ஆனின் சொற்கள் இறைவன் புறமிருந்து இறக்கப்பட்டிருந்தாலும் அது எல்லா விதமான இயல்பிலுள்ள மக்களுக்கும் நேர்வழி காட்டாது. இறைவனின் இந்த இல்ஹாமிய சொற்கள் அல்லது அல்லாஹ்வின் இந்த போதனைகள் எவரது இயல்பு தூய்மையானதாக இருக்குமோ அவர்களுக்குத்தான் நேர்வழி காட்ட முடியும். அத்தகைய மக்கள் இறையச்சம் கொண்ட தூய்மையான இயல்புள்ள நல்ல மக்களாக இருப்பார்கள். இதனை விளக்கியவாறு **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்** இவ்வாறு கூறுகின்றார்கள்:

***அலிஃப், லாம், மீம். ஸாலிகல் கிதாப் லா ரய்ப ஃபீஹி ஹுதன் லில் முத்தகீன்*** என்ற வசனத்தை சிந்தித்துப் பார்க்க வேண்டும். எந்த அளவு நுட்பமாகவும் சிறப்பாகவும் தனது அற்புதத்தை வெளிப்படுத்திக் காட்டும் வகையில் எல்லாருக்கும் திருக்குர்ஆன் நேர்வழி காட்டுவதில்லை என்ற கேள்விக்கு தெளிவான பதிலை இந்த வசனம் எடுத்துக் கூறியிருப்பதைப் பாருங்கள். முதலில் இந்த வசனத்தில் இந்த வேதத்தை உருவாக்கிய கர்த்தா யார் என்பதை கூறி அந்த இறைவனின் மகிமையையும் உயர்வையும் சுட்டிக் காட்டியவாறு ***அலிஃப் லாம் மீம்*** எல்லாரையும் விட அதிகமாக அறிந்த இறைவனாகிய நான் இந்த வேதத்தை இறக்கியுள்ளேன் என்று இறைவன் கூறுகின்றான். இதிலிருந்தும் இதை இறக்கியவன் எல்லா அறிவுகளையும் ஞானங்களையுமுடைய இறைவனாக இருக்கின்றான். அவனது அறிவுக்கு சமமாக வேறு எவருடைய அறிவும் இருக்க முடியாது என்பது தெளிவாக கூறப்பட்டிருக்கின்றது.

இரண்டாவது இந்த வேதத்தின் தன்மை பற்றி எடுத்துக் கூறி அதன் மகத்துவத்தை சுட்டிக் காட்டும் வகையில் ***ஸாலிகல் கிதாப்*** இது எத்தகு மகிமையுள்ள உயர்வான நிலையிலுள்ள வேதநூல் என்றால் இது

உருவாகுவதற்கான காரணம் இறைவனின் அறிவேயாகும். இந்த வேதத்தின் உறைவிடமாகவும் அது புறப்படும் நீரூற்றாகவும் தொன்றுதொட்டு இருந்து வரும் இறைவனாக இருக்கின்றான். இந்த இடத்தில் இறைவன் இது அந்த வேதமாகும் என்று கூறி அந்த என்ற சொல்லை பயன்படுத்தியுள்ளான். இந்த சொல் தூரத்தை சுட்டிக் காட்டுவதற்காக வந்திருக்கின்றது. அதாவது, இந்த வேதம் எத்தகு உயர்வான இறைவனின் அறிவிலிருந்து தோன்றியிருக்கிறது என்றால் அந்த இறைவன் தனது இருப்பில் எவ்வித இணையுமில்லாதவனாக இருக்கின்றான். அவனைப் போல் வேறு எதுவுமேயில்லை. அவனது முழுமையான அறிவும் மறைவாக உள்ள நுட்பமான இரகசியங்கள் மனிதனின் பார்வையிலிருந்து மிகத் தொலைவில் இருக்கின்றது. அதாவது மனிதனின் புரியும் தன்மையிலிருந்து அது மிக உயர்வில் இருக்கின்றது.

மூன்றாவதாக, இந்த வசனத்தின் வெளிப்படையான வடிவம் எத்தகு புகழுக்குரியதாக இருக்கின்றது என்பதில் **லா ரய்ப ஃபீஹீ** (இதில் எவ்வித சந்தேகமும் இல்லை) என்ற வசனம் எடுத்துக் கூறியிருக்கிறது. திருக்குர்ஆன் தனது ஆதாரங்கள் அறிவுப்பூர்வமான கருத்துக்கள் ஆகியவற்றின் மூலம் எத்தகு வடிவத்தைப் பெற்றுள்ளதென்றால், அதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது. அதாவது மற்ற வேத நூற்களைப் போன்று அது வெறும் கதைகளாக இல்லை. மாறாக, அவற்றில் உறுதியான ஆதாரங்களும் மறுக்க முடியாத தெளிவான அடையாளங்களும் இருக்கின்றது. அது தனது நோக்கத்தை போதுமான சான்றுகள் மூலம் விளக்குகின்றது. சந்தேகங்களை நீக்குவதில் பிறரை வெட்டி வீழ்த்தும் வாள் போன்று அது செயல்படுவதால் திருக்குர்ஆனே ஒரு அற்புதமாக திகழ்கின்றது. இறைவனை அடையாளம் காட்டுவதில் இறைவன் இருக்க வேண்டும் என்ற யூகம் வரை மட்டும் மனிதனைக் கொண்டு செல்லாமல் இறைவன் இருக்கின்றான் என்ற உயர் தகுதி வரை மனிதனை இவ்வேதம் கொண்டு செல்கின்றது. இவ்வாறு இந்த மூன்று சிறப்புத் தன்மைகளுக்கும் மனிதனிடம் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்துவதற்கும் சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதற்கும் பெரும் பங்கு இருகின்றது.

இந்த வேதம் தோன்றுவதற்கான நான்காவது காரணமும் இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ளது. அதுவே இந்த வேதம் தோன்றியதற்கான உண்மையான நோக்கமாக இருக்கின்றது. திருக்குர்ஆன் இறக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேறுவதையும் அதன் நேர்வழி காட்டலையும் இறையச்சம் உள்ளவர்களுடன் மட்டுமே தொடர்புபடுத்திக் கூறியுள்ளான். எதுவரை இறையச்சம் ஒருவரிடம் இருக்காதோ அதுவரை சாதாரண அறிவால் மட்டும் ஒருவர் திருக்குர்ஆனிலிருந்து நேர்வழி பெற முடியாது. இதனை **ஹுதல்லில் முத்தகீன்** என்ற வசனம் எடுத்துக் கூறுகிறது. அதாவது எத்தகு உயர் தகுதியிலுள்ள மக்களுக்காக இவ்வேதம் இறக்கப்பட்டுள்ளதென்றால் அவர்களது அந்தரங்கம் தூய்மையானதாக இருந்தாலும் நேர்மையான அறிவும் புரியும் திறனும் உண்மையைத் தேடுகின்ற சரியான நல்லெண்ணமும் ஆர்வமும் அவர்களிடம் இருந்தாலும் இறுதியில் ஈமானிலும் தக்வாவிலும் இறைவனை அடையாளம் கண்டு கொள்வதிலும் முழுமையான தகுதியை அவர்கள் பெறுவார்கள்.

இந்த விஷயங்கள் ஒருவரிடம் இல்லையென்றால், ஒருபோதும் திருக்குர்ஆனை புரிந்து கொள்ள முடியாது.

**தொடர்ந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவன் தொன்றுதொட்டே இருந்து வரும் தனது அறிவின் மூலமாக இப்படிப்பட்டவர்களது நல்ல இயல்பு இந்த நேர்வழியை ஏற்றுக் கொள்ளும் நிலையில் இருப்பதை அறிந்து வைத்துள்ளான். அவர்கள் உண்மையான இறை ஞானத்தைப் பெறுவதில் முன்னேற்றத்தை அடைவார்கள் என்பதையும் இறைவன் அறிந்து வைத்துள்ளான். இறுதியில் இப்படிப்பட்டவர்களுக்குத்தான் இந்த வேதத்திலிருந்தும் நேர்வழி கிடைக்கும். எந்நிலையிலும் இப்படிப்பட்டவர்களிடம் இந்த வேதம் சென்றடைந்து விடும். அவர்கள் மரணிப்பதற்கு முன்னர் அவர்கள் நேர்வழியில் வந்து விடுவதற்கான நற்பாக்கியத்தை இறைவன் அவர்களுக்கு வழங்குவான். பாருங்கள்! எவர்கள் இறைவனது அறிவில் நேர்வழியைப் பெற தகுதியுள்ளவர்களாக இருக்கின்றார்களோ மேலும் எவர்கள் தங்களது இயல்பில் தக்வா என்ற நற்பண்பைக் கைக்கொள்வார்களோ அவர்கள் கண்டிப்பாக நேர்வழியைப் பெறுவார்கள் என்று இறைவன் தெளிவாகக் கூறியுள்ளான்.

எவர்கள் இறைவனது அறிவில் நேர்வழி பெறக்கூடியவர்களாக இருக்கின்றார்களோ அவர்கள் முஸ்லிம்களாக இல்லாவிட்டாலும் படிப்படியாக இவர்கள் எல்லாருமே இந்த நேர்வழியைப் பெற்று விடுவார்கள். உண்மையான இஸ்லாத்தில் வழிமுறைகளை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்று எவர்கள்

தொடர்பாக இறைவனது அறிவில் இருக்கின்றதோ அவர்களே இந்நேர்வழியில் இருந்தும் வெளியில் இருப்பார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு போதனைகள் செய்தாலும் போதனைகள் செய்யாமல் இருந்தாலும் இவர்கள் ஈமான் கொள்ளமாட்டார்கள். இந்த முழுமையின் தகுதிகள் வரை அவர்களால் செல்ல முடியாது. தக்வாவின் உயர் தகுதிகள் வரை அவர்களால் செல்ல முடியாது. சுருக்கமாக இந்த வசனங்களையும் இதற்குப் பிறகு வரும் வசனங்களிலும் திருக்குர்ஆனின் நேர்வழி காட்டலை தங்களது அசல் இயல்பில் மனயிச்சைகளின் இருள்கள் மிகைந்து நிற்காத இறையச்சம் உடையவர்களால்தான் பின்பற்றி நடந்து அதிலிருந்து பலன் பெற முடியும் என்று இறைவன் கூறியுள்ளான்.

எனவே, இந்த போதனைகளைக் கேட்பதற்கு இறையச்சம் அடிப்படை நிபந்தனையாக இருக்கின்றது. அந்த போதனைகளை ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் போன்றவர்களும் கேட்டார்கள். அபூஜஹில் போன்றவர்களும் கேட்டார்கள். ஆனால், உண்மையைத் தேடியவர்கள் அவற்றை ஏற்றுக் கொண்டு சிறந்த முடிவை அடைந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் எத்தகைய உயர்வான தகுதியைப் பெற்றார்கள் என்றால் உலகம் உள்ள நாள் வரை அவர்களை மக்கள் நினைவு கூருவார்கள். ஆனால் அபூஜஹில் போன்றவர் மிக மோசமான முடிவை அடைந்தனர். இன்றும் தஜ்ஜாலிய முயற்சிகள் செய்கின்றவர்கள் இந்த வேதத்தை மாற்றுவதற்கு முயற்சிகள் செய்து வந்தால் இறுதியில் இவர்களும் தங்களது தீய முடிவை கண்டுகொள்வார்கள். அவர்களது முயற்சியில் ஒருபோதும் அவர்கள் வெற்றி பெற முடியாது என்பதே அல்லாஹ்வின் வாக்குறுதியாகும். ஆனால் எவர்கள் இந்த தூய்மையான வேதத்தின் தூய்மையான போதனைகளை தூய்மையான உள்ளத்துடன் கேட்பார்களோ அவர்களது வாழ்க்கையில் இந்த போதனைகள்தான் புரட்சியை ஏற்படுத்தும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆனில் முழுமையான போதனைகள் இருப்பதைப் பற்றி அல்லாஹ்வே தனது வாதத்தை எடுத்து வைத்துள்ளான். அல்லாஹ் கூறுகின்றான்: ***அல் யவ்ம அக்மல்து லகும் தீனுக்கும் லா அக்மம்து அலைக்கும் நிஹ்மத்தி*** - இன்று நான் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை முழுமையடையச் செய்துள்ளேன். எனது அருட்கொடைகளை அதாவது திருக்குர்ஆனின் போதனைகளை உங்கள் மீது நிறைவு செய்துள்ளேன். இன்னோரிடத்தில் முழுமையடைதல் என்றால் என்ன என்பதை விளக்கும் வகையில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்: முழுமையான மார்க்கம் பற்றிய உண்மை நிலையை அல்லாஹ் எவ்வாறு விளக்கியுள்ளான் என்பதை நீர் காணவில்லையா? அது தூய்மையான ஒரு மரத்தைப் போன்றது. அதன் வேர் உறுதியாக நிலைபெற்றுள்ளது. அதன் கிளை வானத்தை எட்டியுள்ளது. ஒவ்வொரு காலத்திலும் அது தன் இறைவனின் அனுமதியுடன் தனது புத்தம் புதிய பழத்தை வழங்குகின்றது. மக்கள் இந்த உதாரணங்களை நினைவு கூற வேண்டும் என்பதற்காகவே அல்லாஹ் அவர்களுக்கு அவற்றை விளக்குகின்றான். மேலும் இதன் மூலமாக அவர்கள் அறிவுரையினைப் பெற வேண்டும்.

கெட்ட வாக்கின் நிலை பூமியிலிருந்து பிடுங்கி எறியப்பட்ட மேலும் தனக்கு எங்கும் நிலையில்லாத கெட்ட மரத்தைப் போன்றதாகும்.

நிலைத்து நிறக்கக் கூடிய வாக்கைக் கொண்டு அதாவது எந்த வாக்கானது நிரூபிக்கப்பட்ட உண்மையாகவும் ஆதாரங்கள் நிறைந்தவையாகவும் உள்ளதோ அதனைக் கொண்டு அல்லாஹ் நம்பிக்கை கொண்டவர்களுக்கு இவ்வுலக வாழ்க்கையிலும் மறுமையிலும் உறுதியை வழங்குகின்றான். மேலும் அநீதி இழைப்பவர்களை அல்லாஹ் வழி தவறி விடுகிறான். அநீதியிழைப்பவர் தாமாக நேர்வழி பெற முயற்சி செய்யாதவரை இறைவனிடமிருந்து உதவியைப் பெற முடியாது. (14:25-28)

இறைவனின் வசனங்களில் ஒன்றுக்கு நாம் பொருள் கூறும் போது ஏனைய இறைவசனங்களும் அதன் கருத்துக்கு ஒத்ததாக இருக்கின்றதா என்பதை பார்க்க வேண்டும். இறைவேதத்தின் வசனங்களுக்கு அந்த வேதமே வழங்கும் விளக்கம் மற்ற எல்லா விளக்கங்களையும் விட முதன்மையானதாக இருக்கின்றது.

இப்போது அல்லாஹ் இந்த வசனங்களில் தூய்மையான புனித வாக்கின் சிறப்புத்தன்மையானது மூன்று விஷயங்களில் அடங்கி இருக்கின்றது என்று கூறுகின்றான். முதலாவது சிறப்புத்தன்மை **அஸலுஹா ஸாபித்துன்**. அதாவது ஈமானின் வேர்கள் உறுதியாக நிலைநிற்கும் வகையில் உண்மையில் திருக்குர்ஆனை பின்பற்றுபவர்கள் தங்கள் ஈமானில் உறுதியாக நிலைத்து நிற்பார்கள். நிச்சய உறுதியின் முழுமையான தன்மையை அவர்கள் அடைந்திருப்பார்கள். மேலும் மனிதனின் இயல்பு அப்போதனைகளை ஏற்றுக்

கொள்ளும். இந்த வசனத்தில் வந்துள்ள அர்ழ் (பூமி) என்ற சொல்லின் கருத்து மனித இயல்பாகும். ***மின் ஃபவ்கில் அர்ழி*** (பூமியின் மேல்) என்ற சொல் இதனை இன்னும் தெளிவாக சுட்டிக் காட்டுகிறது. சுருக்கமாக, ஈமானை வெளிப்படுத்தும் கொள்கைகள் நிரூபிக்கப்பட்ட உண்மையாகவும் மனித இயல்புக்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும். அதாவது மனித இயல்பும் ஈமானும் ஒரே பொருளாக ஆகிவிட வேண்டும்.

பிறகு, முழுமை பெற்ற போதனைகளின் இரண்டாவதாக சிறப்பாக ***ஃபர்ஹீஹா ஃபிஸ்ஸமாயீ*** (அதன் கிளைகள் விண்ணை எட்டி விடும்) என்று அல்லாஹ் கூறியுள்ளான். இதன் கருத்து எவர்கள் விண்ணின் பக்கம் தங்களது பார்வையை உயர்த்தி பார்ப்பார்களோ அதாவது எவர்கள் இறைவனின் வார்த்தைகளை கவனமாக படிப்பார்களோ அவர்கள் மீது அவ்வேதத்தின் உண்மை திறக்கப்படுகிறது.

இரண்டாவதாக, இந்த போதனைகளில் கிளைகள் அதாவது இப்போதனைகளின் பல அம்சங்களும் முழுமை பெற்றவையாக இருக்கும். உதாரணமாக, நற்செய்கைகள் தொடர்பான விளக்கம், நல்லொழுக்கம் தொடர்பான விஷயங்கள் ஆகிய இவையாவும் அதன் முழுமையான இறுதி எல்லையைத் தொட்டுவிடும். அவற்றில் எவ்வித கூடுதலும் இனி ஏற்பட முடியாது. எவ்வாறு ஒரு பொருள் பூமியிலிருந்து வானம் வரை சென்று அதை தொட்டுவிட்ட பிறகு அதன் இறுதி எல்லையை அடைந்து விடுகிறதோ அதை போல திருக்குர்ஆனின் போதனைகளும் அதன் முழுமையின் இறுதி எல்லையை அடைந்து விட்டது.

திருக்குர் ஆனின் போதனைகளின் மூன்றாவது சிறப்பாக ***துஃதி உகுலஹா குல்ல ஹினின்*** எல்லா சமயங்களிலும் நிரந்தரமாக அது தனது பழத்தை வழங்கிக்கொண்டிருக்கும் என்று இறைவன் கூறுகின்றான். அதாவது எந்த சமயத்திலும் அது காய்ந்து போன மரம்போல் ஆகாது. பூக்கள், பழங்கள் ஆகியவற்றில் இருந்து முற்றிலும் காலியாக இருக்கின்ற மரம் போல் அது ஆகிவிடக் கூடாது.

நண்பர்களே! கேளுங்கள் அல்லாஹ் தஆலா அவ்யவ்ம் அக்மல்து லகும் தீனகும் (5:4) என்ற வசனத்தில் உள்ள விளக்கத்தையும் அவனே கூறிவிட்டான். அதாவது முழுமையடைந்த மார்க்கத்தில் இந்த மூன்று அடையாளங்களும் இருக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும் என்று கூறி அவற்றை விளக்கியிருக்கின்ற இறைவன் தனது போதனைகளில் அந்த மூன்று அடையாளங்கள் இருப்பதை நிரூபித்தும் காட்டியிருக்கின்றான். **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்** கூறுகின்றார்கள்:

ஈமானின் வேர்களில் முதல் அடையாளமாக கலிமா ***லா இலாஹா இல்லல்லாஹ்*** இருக்கின்றது. அதனை எந்த அளவு தெளிவாக திருக்குர் ஆன் விளக்கி கூறியிருக்கின்றதென்றால் அந்த அனைத்து ஆதாரங்களையும் நான் எழுதுவதாக இருந்தால் அதை ஒரு போதும் எழுதி முடிக்க முடியாது.

***ஃபர்ஹீஹா ஃபிஸ்ஸமாயீ*** என்பதன் பொருள் வானம் வரை அதன் கிளைகள் எட்டியிருக்கின்றன என்பதாகும்.

விண்ணின் பக்கம் தங்களது பார்வையை செலுத்தக் கூடியவர்கள் அதாவது இயற்கை சட்டத்தை கவனமாக பார்க்கின்றவர்கள் அதனை புரிந்து கொள்வார்கள். முழுமை பெற்ற மார்க்கதின் போதனைகள் முழுமையில் அதன் இறுதி எல்லையை அடைந்திருக்க வேண்டும். அதற்கான சான்று இதே வசனத்தில் கூறப்பட்டிருக் கின்றது. மேலும் அல்லாஹ் இதற்கான சான்றை ***அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமின். அர்ரஹ்மா னிர்ரஹீம். மாலிக்கி யவ்மித்தீன்*** என்ற வசனத்தில் கூறியுள்ளான். இதன் பொருள் மகிமை மிக்க இறைவன் எல்லா உலகங்களுக்கும் இறைவனாக இருக்கின்றான். அடியானுக்கு தேவைப்படும் அனைத்திற்கும் இறுதி காரணமாக இருந்து அதனை அவனுக்கு வழங்கும் ஆற்றல் அவனுக்குத்தான் இருக்கின்றது. இரண்டாவது அவன் ரஹ்மானாக இருக்கின்றான் நற்செய்கைகளின் எவ்வித தேவையுமில்லாமலேயே (அதாவது நல்ல செயல்கள் எதையும் அடியான் செய்யாத நிலையில்) தன் தரப்பில் இருந்தும் பல்வேறு விதமான அருட்கொடைகளை தனது படைப்பினங்களுக்கு அவன் வழங்கியிருக்கின்றான். மேலும் அவன் ரஹீமாக இருக்கின்றான். அதாவது நல்ல செயல்களை செய்பவர்களுக்கு அவன் உதவுகின்றான். அவர்களது நோக்கங்களை அவன் முழுமையடையும் படி செய்கின்றான். மேலும் அவன் ***மாலிக்கி யவ்மித்தீன்*** ஆக இருக்கின்றான். அதாவது எல்லாவிதமான நற்கூலியும், தண்டனையும் அவனது கைகளில் இருக்கின்றது. தான் விரும்புவது போல் அவன் தனது அடியாருடன் நடந்து கொள்கின்றான். அடியானின் ஒரு தீய செயலுக்கு அவன் விரும்பினால் தண்டனையளிப்பான். அந்த தண்டனை அந்த தீய செயலுக்கு ஏற்ப அமையும் அல்லது அவன் விரும்பினால் தனது அடியானின் மன்னிப்பிற்கான வழி வகைகளை செய்வான். இந்த எல்லா விஷயங்களும் மகிமைமிக்க அவ்விறைவன் இவ்வுலகில் ஏற்படுத்தியுள்ள அமைப்பை பார்க்கும் போது அதன் மூலமாக அது தெளிவாக

நமக்கு நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.**

மூன்றாவது அடையாளமாக அல்லாஹ் ***துஃதி உகுலஹா குல்ல ஹினின்*** என்று கூறியுள்ளான். அதாவது முழுமை பெற்ற வேதத்தின் இன்னொரு அடையாளமாக அவ்வேதம் எந்த பழங்கள் அதன் மூலம் கிடைக்கும் என்ற வாக்குறுதியை தந்துள்ளதோ அந்த வாக்குறுதி வெறும் வாக்குறுதியாக மட்டும் இருக்காது. மாறாக, அது எல்லா சமயங்களிலும் எப்போதும் நிரந்தரமாக தனது பழங்களை தந்து கொண்டேயிருக்கும். இங்கு பழம் என்பதன் பொருள் எல்லா விதமான விண்ணின் அருட்கொடைகளையும் இறைவனுடன் உரையாடுகின்ற நற்பாக்கியத்தையும் எல்லாவிதமான ஏற்கப்பட்ட தன்மையையும் வழக்கத்திற்கு மாற்றமான அற்புதங்களை வெளிப்படுத்தும் தன்மையும் கொண்ட அல்லாஹ்வின் சந்திப்பாகும். இதைப் பற்றி **அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:**

எங்கள் இறைவன் அல்லாஹ் எனக் கூறி, இக் கொள்கையில் நிலைத்திருப்பவர்களிடம் அதாவது பல்வேறு சோதனைகளும், பூகம்பங்களும் வந்த பிறகும் தங்களது ஈமானை இழந்துவிடாமல் உறுதியாக நிலைத்திருப்பவர்கள் மீது மலக்குகள் இறங்குவார்கள். நீங்கள் அஞ்சவும் வேண்டாம். கவலை அடையவும் வேண்டாம். உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சொர்க்கத்தை பற்றிய நற்செய்தியை கேட்டு மகிழ்வீர்களாக. இப்போது அந்த வகையில் உங்களுக்கு கிடைத்து விட்டது. சொர்க்கத்தின் வாழ்வு ஆரம்பமாகி விட்டது என்று அந்த வானவர்கள் அவர்களிடம் கூறுவார்கள்.

சொர்க்கத்தின் வாழ்வு எப்படி ஆரம்பமானது? ***நஹ்னு அவ்லியாவுகும்*** - அதாவது நாங்கள் உங்கள் நண்பர்களாகவும் உங்களை பாதுகாப்பவர்களாகவும் இருக்கின்ற நிலையில் இந்த சொர்க்க வாழ்வு உங்களுக்கு ஆரம்பமாகி விட்டது. நாங்கள் இவ்வுலகிலும் மறுமையிலும் உங்கள் நண்பர்களாக இருப்போம். உங்களுக்காக இந்த சுவர்க்க வாழ்வில் நீங்கள் விரும்பியவை அனைத்துமே கிடைக்கும். இது மிக்க மன்னிப்பவனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய இறைவனிடமிருந்துள்ள விருந்தோம்பலாக இருக்கும் என்றும் வானவர்கள் அவர்களிடம் கூறுவார்கள். (41:31-33)

விருந்தோம்பல் என்று கூறி ஒவ்வொரு காலத்திலும் அது தன் இறைவனின் அனுமதியுடன் தனது பழத்தை வழங்கிக் கொண்டிருக்கும் (14:26) என்ற வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பழத்தை அல்லாஹ் சுட்டிக் காட்டுகின்றான்.

அதன் கிளை வானத்தை எட்டியுள்ளது (14:25) என்ற வசனம் தொடர்பாக ஒரு விஷயத்தை நான் கூறிவிடுகின்றேன். முழுமைபெற்ற போதனைகளின் வடிவில் திருக்குர்ஆன் அதன் முன்னேற்றத்தின் இறுதி எல்லையை எப்படி அடைய முடிந்தது? இந்த கேள்விக்கான பதில் என்னவென்றால் திருக்குர்ஆனுக்கு முன்னால் எவ்வளவு போதனைகள் கூறப்பட்டிருந்தாலும் உண்மையில் அவற்றில் உள்ள சட்டங்கள் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்துடனும் ஒரு குறிப்பிட்ட காலத்துடனும் மட்டும் தொடர்புடையவையாக இருந்தன. முழு உலகிலுமுள்ள எல்லா மக்களுக்கும் பலன் கிடைக்கும் வகையில் அப்போதனைகள் அமையவில்லை. ஆனால், திருக்குர்ஆன் எல்லா சமுதாயங்களின் போதனைகளையும் எல்லா காலங்களின் போதனைகளையும் நிறைவடையச் செய்வதற்கும் முழுமைபெறச் செய்வதற்கும் வந்திருக்கின்றது. உதாரணமாக, ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் போதனைகளில் அதிகமாக தண்டனை வழங்குவது பற்றியும் பழிவாங்குதல் பற்றியும் கூறப்பட்டிருக்கின்றது. பல்லுக்கு பதில் பல்; கண்ணுக்குப் பதில் கண் என்ற சொற்றொடர்களில் இருந்து நமக்கு இது தெரிய வருகிறது. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் போதனைகளில் அதிகமாக மன்னிப்பதைப் பற்றி கூறப்பட்டிருக் கின்றது. ஆனால், இரண்டு போதனைகளிலும் குறை இருப்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. எப்போதும் பழி வாங்கிக் கொண்டிருந்தாலும் நடக்க வேண்டிய பணிகள் நடக்காது. அவ்வாறே எப்போதும் மன்னித்துக் கொண்டிருந்தாலும் நடக்க வேண்டிய பணிகள் நடக்காது. மாறாக, ஒவ்வொரு சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்றவாறு மென்மையையும், கடினத்தையும் கடைபிடிக்க வேண்டும்.

**இது தொடர்பாக அல்லாஹ் கூறுகின்றான்:**

***வ ஜஸாஉ ஸய்யிஅதின் ஸய்யிஅதுன் மிஸ்லுஹா ஃபமன் அஃபா வஅஸ்லஹ ஃபஅஜ்ருஹூ அலல்லாஹி*** - ஒரு தீங்கிற்குரிய கூலி தனக்கு இழைக்கப்பட்ட அதே அளவு தீங்கேயாகும். ஆனால் எவர் மன்னித்து, அந்த மன்னிப்பின் விளைவாக குழப்பம் ஏற்படாமல் சீர்திருத்தம் ஏற்பட்டால், அதாவது

மன்னிப்பை பொருத்தமற்ற இடத்தில் வழங்காமல் அதற்கான சரியான சந்தர்ப்பத்திலும் இடத்திலும் வழங்கியவருக்குரிய நற்பலன் அல்லாஹ்விடம் இருக்கின்றது. (42:41)

இது ஒரு சிறந்த வழிமுறையாகும். மன்னிப்பதன் மூலம் குழப்பம் ஏற்படுதல் என்பதன் கருத்தை ஒரு உதாரணம் மூலம் விளக்குகின்றேன். திருடுவதையே அன்றாட பழக்கமாக ஆக்கிக் கொண்ட ஒருவரை நாம் மன்னித்து விட்டு விட்டால் அவர் மீண்டும் திருடுவார். மற்றவர்களுக்கும் இழப்பை ஏற்படுத்துவார். இதனால் மேலும் பாவங்கள் பரவுவதற்கான அபாயம் இருக்கின்றது. எனவே இப்படிப்பட்ட மன்னிப்பு குழப்பத்திற்கு காரணமாக அமைந்து விடும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இதைவிட வேறு சிறந்த போதனை என்ன இருக்க முடியும்? மன்னிக்க வேண்டிய இடத்தில் மன்னிப்பையும், பழிவாங்க வேண்டிய இடத்தில் பழிவாங்குதலையும் அது வைத்திருக்கின்றது. பிறகு அல்லாஹ் கூறுகின்றான்:

**இன்னல்லாஹா யஃமுரு பில்அத்லி வல் இஹ்ஸானி வ ஈத்தாயிதல் குர்பா** - நிச்சயமாக அல்லாஹ் உங்களை நீதியுடன் நடந்துகொள்ளும்படியும், நீதியுடன் நடந்து கொள்வதுடன் அதிகப்படியாக நன்மை செய்யவும், நன்மை செய்வதுடன் மட்டுமின்றி அதை விட சிறந்த முறையில் நீங்கள் எந்த அளவு மக்களுடன் மென்மையுடனும், அன்புடனும் நடந்து கொள்ள வேண்டுமென்றால் அவர்கள் உங்கள் அன்பிற்குப் பாத்திரமான உறவினர்களைப் போல் அவர்களுடன் நீங்கள் நடந்து கொள்ள வேண்டும் என்று அல்லாஹ் கட்டளையிடுகின்றான். (16:91) இப்போது நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நன்மையில் முன்னேறுவதற்காக மூன்று படித்தரங்கள் இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கின்றது. முதலில் மனிதன் நீதியுடன் நடந்து கொள்கின்றான். நீதிக்கு எதிரில் அதே அளவு நீதியின் உரிமையை அவன் மற்றவர்களுக்கு வழங்குகின்றான். பிறகு இந்த தகுதியில் முன்னேறும்போது தாமாகவே அவன் மற்றவர்களுக்கு நன்மை செய்கின்றான். அந்த உயர் தகுதியிலும் முன்னேறுகின்றபோது நன்மை செய்வதையும் கடந்து ஒரு தாய் தன் பிள்ளையுடன் அனுதாபத்துடனும் கருணையுடனும் நடந்து கொள்வது போன்று அவன் மனிதர்களிடம் அனுதாபத்துடனும் கருணையுடனும் நடந்து கொள்கின்றான். நன்மை செய்யும் எண்ணத்துடன் அல்லாமல் இயல்பாகவே அவனிடமிருக்கும் உணர்வின் அடிப்படையில் அவன் இவ்வாறு நடக்கின்றான்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

சீர்திருத்தத்திற்கான எல்லா போதனைகளையும் தன்னகத்தே கொண்டுள்ள இந்த வேதநூலுக்குப் பிறகு வேறு அந்த வேதநூலுக்காக நாம் காத்திருக்க வேண்டும்?

அல்லாஹ் அனைவருக்கும் இந்த உயர்வான போதனைகளின்படி செயல்படும் நற்பாக்கியத்தை வழங்குவானாக! ஆமீன்.

*KUTHBA*

**HAZRAT MIRZA MASROOR AHMAD**

*KALIFATHUL MASIH V*

*ON 11.01.08 AT LONDON*

*TRANSLATED BY : M .RAFEEQ AHMAD*

*PUBLISHED BY :* MAJLIS KHUDDAMUL AHMADIYYA, MELAPALAYAM,TAMILNAD *TELEFAX : 0462 – 2352456*